## <u>முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்.</u>

**<u>Succession.O.P.No. 30/2021</u>**

**<u>நாள்: 23.11.2022</u>**

ம.சா.I அஞ்சம்மா என்பவர் ஆஜர். பிரமாணம் செய்யப்பட்டு, **முதல் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை** செய்யப்படுகிறார்.

எனக்கும், என் கணவருக்கும் 1988ல் திருமணமானது. திருமணத்திற்கு பிறகு 15 வருடங்கள் என் கணவருடன் சுமூகமான வாழ்க்கை நடத்தினேன். 2006லிருந்து முதல் எதிர்மனுதாரருடன் என் கணவர் குடும்பம் நடத்தி வருகிறார். அதன்பிறகு என் கணவர் விவாகரத்து மனு தாக்கல் செய்தார். வழக்கு நடந்தது. அந்த வழக்கில் நான் விசாரணைக்கு வரவில்லை என்பதால் ஒருதலைபட்ச விவாகரத்து உத்தரவு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல, என் கணவர் விசாரணைக்கு வராததால் மனு தள்ளுபடியானது. விவாகரத்து வழக்கு நிலுவையில் இருந்தபோது என் கணவர் கீழப்பழூரில் முதல் எதிர்மனுதாரருடன் குடும்பம் நடத்தி வந்தார் என்றால் சரிதான். அப்போது நான் என் கணவரிடம் ஜீவனாம்சம் கேட்டு வழக்கு போட்டேன் என்றால் சரிதான். மேற்படி வழக்குகள் நிலுவையில் இருக்கும்போதே நானும், என் மகனும் என் கணவரிடம் சொத்து கேட்டு பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல, என் கணவர்தான் எங்களுக்கு சொத்தை எழுதிக் கொடுத்தார். இம்மனு சம்மந்தப்பட்ட ஆயுள்காப்பீட்டு பாலிசிகள் நான்கிலும் என் கணவர் முதல் எதிர்மனுதாரரை நாமினியாக போட்டுள்ளார் என்றால் தவறாக போட்டுள்ளார். என் கணவரும், முதல் எதிர்மனுதாரரும் முதலில் கீழப்பழூரிலும், அதன் பின்னர் என் கணவர் இறக்கும் வரை திருமழப்பாடியிலும் கணவன், மனைவியாக வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். திருமழப்பாடியில் என் கணவர் அவர் பெயரிலும், எதிர்மனுதாரர் பெயரிலும் இடம் வாங்கி வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். முதல் எதிர்மனுதாரர் அவருடைய முதல் கணவரிடம் விவாகரத்து வாங்கியுள்ளார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. என் கணவரும், முதல் எதிர்மனுதாரரும் அவரவர் முறைப்படி விவாகரத்து பெற்று புன்னைநல்லூர் மாரியம்மன் கோவிலில் திருமணம் செய்து கொண்டு கணவன்

மனைவியாக வாழ்க்கை நடத்தி வந்தார்கள் என்றாலும், இந்த விபரங்கள் என் சம்மதத்துடன் நடந்தது என்றாலும் சரியல்ல. என் கணவர், முதல் எதிர்மனுதாரருடன் குடும்பம் நடத்திய காலத்தில்தான் நான் என் கணவருடன் பிரச்சனை செய்து வழக்குகள் போட்டேன் என்றால் சரிதான். என் கணவர் கொலை செய்யப்பட்டு இறந்துபோனார் என்றால் சரிதான். என் கணவரை என் மகன்களான 3,4 மனுதாரர்கள் கொலை செய்ததாக அரியலூர் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் கொலை வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். என் கணவர் எங்களை கவனிக்காமல் முதல் எதிர்மனுதாரருடன் குடும்பம் நடத்திய காரணத்தால் என் மகன்கள் அடிக்கடி என் கணவரிடம் பிரச்சனை செய்தார்கள் என்றால் சரியல்ல. என் தூண்டுதலின்பேரில்தான் சொத்திற்காக என் கணவரை என் மகன்கள் கொலை செய்தார்கள் என்றால் சரியல்ல.

**(முதல் எதிர்மனுதாரர் தரப்பு வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை பாதியில் நிறுத்தப்பட்டது)**

**(ஒம்)செல்வி.எஸ்.மகாலெட்சுமி,**
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
**அரியலூர்.**